**செ.வெ.எண்: 33** **நாள்: 15.09.2016**

# பத்திரிகைச்செய்தி

## கோழி அபிவிருத்தித் திட்டம்

தமிழ்நாடு அரசு கோழிப்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் "கோழி அபிவிருத்தித் திட்டத்தினை" ரூ.25.00 கோடி செலவில் 2016 - 2017ம் ஆண்டிற்கு செயல்படுத்த ஆணை வழங்கியுள்ளது.

"கோழி அபிவிருத்தித் திட்டத்தின்" கீழ் 2012-13 ஆம் ஆண்டு முதல் 8 மாவட்டங்களில் கறிக்கோழிப்பண்ணை மற்றும் 18 மாவட்டங்களில் 250 எண்ணிக்கையிலான நாட்டுக்கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

"கோழி அபிவிருத்தித் திட்டத்தின்" கீழ் தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்டத்தின் "புது வாழ்வு" (PVP / TNSRLM) உறுப்பினர்களும் பயன்பெறும் பொருட்டு "சிறிய அளவு நாட்டுக்கோழிப்பண்ணை" நிறுவ தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்டத்தின் "புது வாழ்வு" (PVP/TNSRLM) செயல்படும் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் 100 எண்ணிக்கையிலான நாட்டுக்கோழிகளை பயனாளியின் புறக்கடையிலேயே வளர்க்கத் தேவையான கோழிக்கூண்டு, வேலி அமைத்தல், அசோலா உற்பத்தி, தீவனம் மற்றும் 4 வார வயது கோழிக்குஞ்சுகள் வாங்க ஆகும் மொத்த செலவில், 25 சதவீதம் மானியம் தமிழக அரசு வழங்கவுள்ளது. மேலும், தீவனச்செலவைக் குறைப்பதற்கும், உள்ளூர் சந்தையில் கிடைக்கும் பொருட்களைக்கொண்டே கோழித்தீவனம், பயனாளிகளே தயாரிப்பதற்கு ஏதுவாக, 10 பயனாளிகளுக்கு தலா ஒரு "தீவன அரவை இயந்திரம்" வழங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்டத்தின் "புது வாழ்வு" (PVP/TNSRLM) உறுப்பினர்கள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியானவர்கள். எனவே, அந்தந்த மாவட்ட தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார திட்டத்தின் "புது வாழ்வு" (PVP / TNSRLM) திட்ட அதிகாரிகளிடம் உறுப்பினர்கள் விண்ணப்பம் செய்யக்கோரப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**